செ.வெ.எண்: 48 நாள்: 23.10.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்த ஆண்டு கூட்டுறவு பண்டகசாலையின் தீபாவளி விற்பனை இலக்கு ரூ.75 இலட்சம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை நகராட்சி, தெற்கு 4ம் வீதியில் எம்.எம்.16, புதுக்கோட்டை நகர கூட்டுறவு பண்டகசாலையின் மெகா பட்டாசு கடையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.10.2016) திறந்து வைத்தார்.

இந்த கூட்டுறவு பண்டகசாலையின் மெகா பட்டாசு கடையினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் திறந்து வைத்து முதல் விற்பனைக்குரிய பட்டாசினை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு வருகின்ற தீபாவளி பண்டிகையையொட்டி பொதுமக்களுக்கு குறைந்த விலையில் தரமான பட்டாசுகளை கூட்டுறவு பண்டகசாலையின் மூலம் விற்பனை செய்ய உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுக்கோட்டை நகராட்சி தெற்கு 4ம் வீதியில் புதுக்கோட்டை நகர கூட்டுறவு பண்டகசாலையின் மெகா பட்டாசு கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் கீழ 2ம் வீதியிலும் கூட்டுறவு பண்டகசாலையின் பட்டாசுகடை செயல்பட்டு வருகிறது.

இந்த மெகா பட்டாசு கடையில் தரம் நிறைந்த பாதுகாப்பான அய்யன் மற்றும் ஸ்டாண்டர்டு பட்டாசுகள் மட்டும் வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யப்பட உள்ளது. வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் பிளவர் பாம், டிட்டோ ஸ்பெஷல் (3 Colour) போன்ற புதுப்புது பட்டாசு வகைகள் மற்றும் மத்தாப்பு வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ளது. இதே போன்று கிப்ட் பாக்ஸ், பேன்ஸி செல், பேன்ஸிஸ் மற்றும் நாவல்டிஸ், ராக்கெட் வகைகள், ஹை சாட்ஸ் வகைகள், வாலா வகைகள், சரவெடி வகைகள், வெடி வகைகள், அணுகுண்டு வகைகள், எலக்ட்ரிக் ஸ்டோன், பென்சில் வகைகள், சாட்டை வகைகள், பூச்சட்டி வகைகள், தரைச்சக்கரம் வகைகள், கம்பி மத்தாப்பு மற்றும் மத்தாப்பு வகைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்தாண்டு நகர கூட்டுறவு பண்டகசாலையின் தீபாவளி விற்பனை இலக்கு ரூ.75 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்து பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் தீபாவளி பண்டிகைக்கு தரமான அர்பன் பட்டாசுகளை வாங்கி பாதுகாப்பாக வெடித்து மகிழ வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை நகர கூட்டுறவு பண்டகசாலை மேலாளர் திரு.எம்.கிருஷ்ணகுமார், நகர் மன்ற உறுப்பினர் திரு.அய்யப்பன், கூட்டுறவு சங்க இயக்குநர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**